# நிவாரணம் வழங்காவிடில் சாத்வீக போராட்டம்

(யாழ்ப்பாணம்)

அகதிகளுக்காக வழங்கப்படும் உலர் உணவுப் பொருள்களை ஒருவாரத்திற்குள் வழங்காவிடின் சாத்விகப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் முல்லைத்தீவில் இருந்து அகதிகளாக வெளியேறி கிராமங்களில் தஞ்சமடைந்திருக்கும் பொது மக்கள் முல்லைத்தீவு அரச அதிபருக்கு மஜர் மூலம் அறிவித்துள்ளார்கள்.

கடந்த பதினொருமாதங்களாக அடிப்படை வசதிகளெதுவுமின்றி தாம் அவலவாழ்வு வாழ்ந்து வருவதாகவும், தொழில்வாய்ப்போ எவ்வித வருமானமோ இன்றி ஒரு வேளை உணவிற்கே வழியற்ற நிலையில் பட்டினிச்சாவைத் தாம் எதிர்நோக்கி வருவதாகவும் தமது மஜர் மூலம் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

அகதிகளாக வெளியேறும் மக்களுக்கு உடனடியாகச் சமைத்த உணவுகளை வழங்குதலும், பின் உலர் உணவு

(4 ஆம் பக்கம் பார்க்க)

Registered as News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4 50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2202 வைகாசி 04 ( 18 - 05 - 1991 ) சனிக்கிழமை ஓசை: 89

## விடைத்தாள் திருத்த ஆசிரியர்கள் போதாது

(யாழ்ப்பாணம்)

விடைத்தாள்கள் திருத்துவதற்கு கொழும்பில் ஆசிரியர்கள் போதாது. க. பொ. த (உயர்தர) பரீட்சை வினாத்தாள்களை மதிப்பீடு செய்யவும், புள்ளிகளை வழங்கவும் சிரேஷ்ட ஆசிரியர்களுக்கும், சில முக்கிய பாடநெறிகள் சார்ந்த ஆசிரியர்களுக்கும் கொழும்பில் பற்றாக்குறை நிலவுகிறது. யாழ்ப்பாணத்திலிருந்து போதுமானளவு புள்ளியிடுபவர் (4ஆம் பக்கம் பார்க்க)

## பதினாறு வருடங்களின் பின்

# சர்வதேச மன்னிப்புச் சபை

# சிறிலங்கா வர அனுமதி

(கொழும்பு)

லண்டனில் தலைமையகத்தைக் கொண்ட சர்வதேச மன்னிப்புச் சபையின் அங்கத்தவர் குழுவொன்று சிறிலங்கா வர அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக ஏஜென்சிச் செய்திகள தெரிவிக்கின்றன.

''அம்னஸ்ட்டி இன்டர்நாஷனல்'' எனப்படும் இச்சர்வதேச மன்னிப்புச்சபையின் அங்கத்தவர் குழு இலங்கைவர அனுமதியளிக்கப்பட்டிருப்பதாக சிறிலங்கா பிரதமர் டி. பி. விஜயதுங்கா நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இக்குழுவிற்கு இலங்கையின் எப்பாகத்திற்கும் சென்று எவருடனும் பேசுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாகவும், மூவர்கொண்டகுழுவினர் அடுத்தமாதம் இலங்கை வரவுள்ளனர் என்றும் மேலும் அவர் தெரிவித்ததாக ஏஜென்சிச் செய்திகள் குறிப்பிட்டன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிப்பிரயோகம் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

அனையிறவு இராணுவ முகாமில் இருந்து நேற்றுமுன் தினம் அதிகாலை ஒரு மணி தொடக்கம், பத்து மணிவரை இயக்கச்சிப் பகுதியை நோக்கி

( 4ஆம் பக்கம் பார்க்க)

## ஜோசிம் விசாரணைக்கு ஆணைக்குழு நியமனம்

(கொழும்பு)

இலங்கையில் இருந்து நாடு கடத்தப்பட்ட பிரபல சூதாட்ட விடுதி உரிமையாளர் ஜோசிம் பற்றிய விசாரணைகளை மேற்கொள்வதற்காக பிரதமர் டி. பி. விஜயதுங்கா தலைமையிலான ஆணைக்குழு ஒன்று கடந்த வாரம் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

சீனாவைச் சேர்ந்த மேற்படி நபர் பல ஆண்டுகளாக கொழும்பில் மேற்படி விடுதியை நடத்தி வந்ததுடன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மொறட்டுவை ஆற்றில் மிதந்த பத்து சிங்களவரின் சடலங்கள்

கொழும்பிலிருந்து பதினெட்டுமைல் தெற்கேயுள்ள மொறட்டுவபகுதியில் ஒரு ஆற்றில்பத்துச்சிங்களவர்களின்சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. குண்டுகள் துளைத்த காயங்களுடன் காணப்பட்ட இச்சடலங்கள் ஆற்றில் மிதந்துவந்ததாகத் தெரிகிறது.

கொல்லப்பட்ட பத்துப்பேரில் ஒன்பது இளைஞர்களும் ஒரு யுவதியும் அடங்குவர்.

சிங்களவர்களான இப்பதுப்பேரும் கொல்லப்பட்டமைக்கான காரணம் எதுவும் அறியவராத போதும் ஜே. வி. பி. சந்தேக நபர்களாக இருக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உணவு விநியோகத்தை உடன் முடிக்கப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் அனைவருக்குமான உலர் உணவு விநியோகம் உடடியாக கொடுத்து முடிக்கப்பட வேண்டும் என பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேண்டுகோள் விடுக்கும் அறிவிப்பொன்று நேற்று செயலகத்தில் நடைபெற்ற உணவு விநியோகம் சம்பந்தப்பட்ட கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

அத்துடன் அக்கூட்டத்தில் இடம் பெயர்ந்தவர்களுக்கான கொடுப்பனவு அதாவது ''இ'' அட்டை வைத்திருப்போருக்கான 8ஆம் 9ஆம் இலக்க கொடுப்பனவு இம் மாத முடிவுக்குள் முடித்து விடவேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

மேலும் கூட்டுறவுச் சங்கங்கள் தமது உதவி அரசாங்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பூரியன்காட்டு ஆசிரியை இராணுவத்தால் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் பாலர் பாடசாலை ஆசிரியையொருவர் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாகரை பூரியன்காடு என்னுமிடத்தில் வைத்து வாகரை பாலர் பாடசாலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தாவர எண்ணெய் என தண்ணீர் விற்பனை

(ஈச்சமோட்டை)

தாவர எண்ணெய் என்று தண்ணீரை விற்பனை செய்த சம்பவமொன்று பாண்டியந்தாழ்வு பகுதியில் நிகழ்ந்துள்ளது.

இப்பகுதியில் உள்ள தனியார் கடையொன்றிற்கு ஏழு டின்கள் தாவர எண்ணெயை 2800 ரூபாவிற்கு ஒருவர் விற்று பணத்தையும் பெற்றுக் கொண்டு சென்றுவிட்டார். அவர் சென்றபின் ரின்களை உடைத்துப் பார்த்தபோது ரின்னில் தண்ணீர் நிறைந்திருந்தது. (43)

## வடபகுதி பரீட்சையை நிறுத்த அதிகாரிகள் மட்டத்தில் சதி!

(கொழும்பு)

க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையை வடபகுதியில் நடத்தாது தடை செய்வதற்கு அதிகாரிகள் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சதித்திட்டம் தோல்வியில் முடிவடைந்தது

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் க. பொ. த. (உயர்தரம்) இரண்டாம் கட்டப் பரீட்சை நடத்தப்படுவதைத் தவிர்ப்பதற்கு பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் சிலர் மட்டத்தில் உருவாக்கப்பட்ட சதித்திட்டம் தோல்வியைத் தழுவிக்கொண்டது.

இராணுவ நடவடிக்கைகளினால் பரீட்சை வினாத்தாள்களை மேற்படி மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்க முடியாதநிலை உருவாகியது. இதைச் சாதகமாகப் பயன்படுத்திய பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் சிலர் சதித்திட்டத்தைத் தீட்டியிருந்தார்கள். இவ்வதிகாரிகளின் சதித்திட்டத்தின் பின்னணியில் சில அரசியல் கட்சிகளும் மிக நெருக்கமாகச் சம்பந்தப்பட்டிருந்தன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி உறுப்பினர் பயிற்சி வழங்கப்படும்

(கொழும்பு)

சிறிலங்காவில் கடந்த வாரம் இடம்பெற்ற உள்ளூராட்சித்தேர்தல்களில் வெற்றி பெற்ற அனைத்து உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கும் பயிற்சி வழங்கப்படும் என பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இவர்களுக்கான பயிற்சி

(4ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கிற்கென அவுஸ். 3,25000 டாலர்உதவி

(கொழும்பு)

அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் ஆலயம் புனர்வாழ்வு, புனர்நிர்மாண சமூகநலத்துறை அமைச்சுக்கு ரூபா 3லட்சத்து 25ஆயிரம் அவுஸ்திரேலிய டாலர்களுக்கான காசோலையை வழங்கியுள்ளது, அவுஸ்திரேலியாவில் அவசரப் புனர்வாழ்வு, புனர்நிர்மாணத் திட்டத்தின் ஒருபகுதியாக இது வழங்கப்பட்டுள்ளது விவசாய முயற்சிகளுக்கான நீர் இறைக்கும் இயந்திரங்களையும், படகுகளுக்கான உபகரணங்களையும் வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கென கொள்வனவு செய்வதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படும்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 45-ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
24 - 05 - 1971

இறப்பு
04 - 03 - 1991



### இளங்கோ
### (இராமநாதன் சகாதேவன்)

திருகோணமலையில் திருவுருவம் கொண்டு
காங்கேசன் துறையிலே கல்வி பயின்று
காரை நகரிலே களப்பலி ஆகிவிட்ட
வேங்கை வீரனே இளங்கோவே!

பெற்றோர் கதறியழ உற்றோர் பரிதவிக்க
நாட்டு மண்ணுக்கு உன்னுடல் ஈந்து
ஈழத் தாய்க்கு உன் இன்னுயிர் கொடுத்து
சிரித்த முகத்துடனே சென்றாயே
இளங்கோ!

ஞானவைரவர் கோயிலடி
உரும்பராய்.

குடும்பத்தினர்.

(B-2535)

## 60-ம் நாள் நினைவஞ்சலி



### வீரவேங்கை சோமன்
செல்வன்
### (விநாயகமூர்த்தி இராசேந்திரன்)

தாயின் மடியில்
02-11-1975

தாயக மண்ணில்
20-03-1991

காயம் அழிந்தாலும் அழியாத புகழ்பூத்த
சேயேயெம் சோமனெனும்திருவே - நோயதிலே
வீழவில்லை வீழ்ந்து மனம் வாடவில்லை விடியலுக்காய்
மாளநின்றாய் மங்காதுன்பேர்.

**உனது நினைவலைகள் எங்கள்**
**நெஞ்சில் என்றென்றும் நிலைக்கும்**
**"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"**

மன்னார் சிலாவத்துறை இராணுவமுகாம் தகர்ப்பின்போது இவருடன் வீரமரணமடைந்த வீரவேங்கைகளுக்கும் எமது அஞ்சலி உரித்தாகுக.

ச. விநாயகமூர்த்தி குடும்பத்தினர்
கல்வயல் - சாவகச்சேரி

(B-2526)

## வரி விளம்பரம்

**வகுப்புக்கள்**

Cake Icing Sugar Craft, General Cookery, Hair Dressing புதிய பயிற்சி வகுப்புக்கள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன உடன்தொடர்பு கொள்ளவும்: Yogi Home Science Academy 71 B, Navanmar Road, Off Kachcheri Nallur Road, Nallur, Jaffna. (/R1386)

**தவறிவிட்டது**

சாளிமோட்டார் சைக்கிள் திறப்புடன் சேர்ந்த திறப்புக் கோர்வை ஒன்று இணுவிலுக்கும், ஏழாலைக்கும் இடையில் 15-5-90 அன்று தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் சுன்னாகத்திலுள்ள ''ஹப்பி எலக்ட்டிக்கல்ஸ்'' என்ற நிறுவனத்தில் ஒப்படைக்கவும். (B/2536)

## தேவை

1. தட்டச்சு சுருக்கெழுத்து ஆசிரியர்
2. தட்டெழுத்தாளர்கள் (தமிழ், ஆங்கிலம்)
3. கணக்காளர்கள்
4. காசாளர்கள்

விண்ணப்பங்கள்யாவும் 31-05-91 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

**வாணி**
**கல்வி நிலையம்**
கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

(R-1398)

## உணவுத் தட்டுப்பாடு

(மன்னார்)

மன்னார் கிராமப் பகுதிகளில் உணவுப் பொருள்களின் பற்றாக்குறை நிலவுகின்றது.

நகரில் இருந்து எந்த உணவுப் பொருள்களையும் கிராமப் பகுதிக்கு எடுத்துச் செல்லப் படுவதை சிறிலங்கா இராணுவத்தினர் தொடர்ந்தும தடை செய்துவருகின்றனர். இதனால் மன்னார் மாவட்டத்தின் நகருக்கு வெளியே வாழும் மக்கள் உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்வது நெருக்கடியாக உள்ளது. கிராமங்கள் பலவற்றில் பட்டினி நிலை உருவாகும் அபாயம் தோன்றி இருக்கின்றது.

## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 05 - 18



**செல்வம்**
(அன்னலிங்கம் பகீன் - மண்டைதீவு)

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றி வளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த
**செல்வம்** (அன்னலிங்கம் பகீன் - மண்டைதீவு)

1986 ஆம் ஆண்டு ஆனையிறவு முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்த
**லெப். அங்கிள்** (பிரபுதாஸ் பாக்கியநாதன் வில்லியம் ரஞ்சித் - மிருசுவில்)
**ரகு** (வசீகரன் - சாவகச்சேரி)
**ஜோதிரவி** (அருமைத்துரை திருமாறந்தம் - துணுக்காய்)
**ரஞ்சித்** (ஜெயராஜ் சூசை - வங்காலை)

இதே ஆண்டு பலாலி முகாம் இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த
**தேசிகன்** (சிவகாமி சிவகுமாரன் - புங்குடுதீவு)

1988 ஆம் ஆண்டு வீரமரணமடைந்த
**லெப். அருள** (ச. சத்தியராஜ் - மூதூர்)

இதே ஆண்டு நிலாவெளியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரமரணமடைந்த
**கப்டன் இங்ஸ்லி** (வல்லிபுரம் சிவகுமார் - சரவெட்டி)

1989 ஆம் ஆண்டு புத்தூரில் இந்திய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட
**ஏழு பொதுமக்கள்**

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/ 2523)


## யாழ்நகரில் கம்பியூட்டர் கல்வி

- *Diploma in Data Processing and Computer Programming in Basic Language.*
- *d Base III+ Lotus 1 - 2 - 3 Word Processing*

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்:
25. 05. 1991 1-30 p.m. (சனி, ஞாயிறு வகுப்புக்கள்)
27. 05. 1991 1-30 p.m. (திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்)

- LONDON பரீட்சைக்கு தோற்றவிருப்பவர்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் உகந்த வகையில் கற்பிக்கப்படும்.
- பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
- கணிதத் துறை மாணவர்களுக்கான விசேட வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

மேலதிக விபரங்களுக்கு:



**UNIKCO COMPUTER CENTRE**
37, CLOCK TOWER ROAD,
JAFFNA

(B2512)

## ※ சிந்தனைக்கு ※

நண்பர்களுக்கு ஆலோசனை கூறும்போது, அவர்களுக்கு மிகவும் பிடித்தமானதைச் சொல்லாதே, மிகப் பயனானதைச் சொல்.

— ஹென்றி தியோடர் டக்கர்மேன்

# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 18.05.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

## சோவியத் யூனியனுக்கு சீனா அரசியற் போதனை

வெளியாரைத் திருப்திப்படுத்துவதற்காக உள்நாட்டுக் கொள்கைகளை வகுத்துச் செயற்படுத்தக் கூடாது. சீனா தனது கொள்கையில் உறுதியுடனிருப்பதாலேயே அபிவிருத்தியில் முன்னேறிச் செல்கிறது என சீனாவின் வெளிவிவகார அமைச்சர் சோவியத் யூனியனுக்கு அரசியற் போதனை செய்துள்ளார் அதுவும் தனது சோவியத் யூனியனுக்கான விஜயத்தின்போது மொஸ்கோவில்வைத்து இப்போதனை செய்யப்பட்டுள்ளது.

அண்மைக் காலத்தில் மேற்குலகை திருப்திப் படுத்துவதற்காக சோவியத்யூனியனில் மேற்கொள்ளப் பட்ட ''ஜனநாயக மீட்பு நடவடிக்கைகளும்'' அதனால் ஏற்பட்ட விளைவுகள் குறித்தே சீன வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். இந்த உபதேசம் 1989 ஆம் ஆண்டு சீனாவில் ஏற்பட்ட ஜனநாயகம் கோரிய மாணவர் போராட்டத்தை மேற்குலகின் கண்டனங்களையும், எதிர்ப்புகளையும் மீறி இரும்புக்கரம் கொண்டு அடக்கியதை மனதில் வைத்துக்கொண்டு செய்யப்பட்டிருக்கும் என்பதிலும் சந்தேகம் இருக்க முடியாது.

இந்தப் போதனையின் மூலம் சீன வெளிவிவகார அமைச்சர் சீன அரசாங்கத்தின் நிகழ்காலக் கொள்கையைத் திறம்பட வெளிக்காட்டியுள்ளார் சீனாவும் சோவியத் யூனியன் போன்று கம்யூனிச சித்தாந்தத்தைக் கடைப்பிடிக்கத் தொடங்கியதும வெளித் தொடர்புகளைத் துண்டித்த நிலையில் ஒரு மூடப்பட்ட நிலையிலேயே எண்பது வரையிலும் இருந்தது.

உலகின் மக்கள் தொகையில் முதலிடத்தை வகிக்கும் சீனா அக்காலத்தில் மக்களின் அன்றாடத் தேவைகளான உணவு, உறைவிடம் என்பனவற்றை நிறைவு செய்வதற்காகப் பெரும் போராட்டம் நடத்தி ஓரளவு வெற்றியும் கண்டது. பெருமளவில் மனித வலுவை அடிப்படையாகக் கொண்டிருந்த சீனாவும் மேற்குலகத்துடன் ஒப்பிடும் இடத்து நவீன தொழில் நுட்பத்தில் குறிப்பிடக்கூடிய அளவில் பின்தங்கிய நிலையிலும் பற்றாக்குறையான மூலதனத்தையும் கொண்டிருந்தது.

இந்நிலையில், சீனாவின் அபிவிருத்திக்கு நவீன தொழில்நுட்பமும் மூலதனமும் சோவியத் போன்றே தேவையாக இருக்கின்றது. ஆனால் இதனை வெளியில் இருந்து வாங்குவதற்குத் தயாராக இருக்கும் சீனா உள்நாட்டின் அரசியல் அமைப்புக்களில் எந்தவித மாற்றத்தையும் செய்யத் தயாராக இல்லை.

அதாவது சோவியத் யூனியன் மேற்கொண்டதுபோல் தொடர்ச்சியான பல மாற்றங்களைச் செய்ய தயாராக இருக்கவில்லை. மேற்குலகின் 'ஜனநாயக மீட்புக் கோரிக்கைகள்'' சீனா அசட்டை செய்யவில்லை பதிலாக மேற்குலகின் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியது. கடந்த மாதம் சீனாவிற்கு விஜயம் செய்த அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி காட்டர் சீனாவில் மனித உரிமைகள் மீறப்படுவதைபபற்றிப் பேசியபோது சீனப் பிரதமர் அது அமெரிக்காவிலும்தான் நடைபெறுகின்றது எனக் கூறி அவர் வாயை அடைத்தார்.

மேற்குலகிடம் இருந்து சில உதவிகளைப் பெறும் நோக்கில் சீனாவும் ''ஜனநாயக மீட்பு நடவடிக்கை'' என்ற ரீதியில் பெரும் மாற்றங்களைச் செய்ய முற்பட்டிருக்குமானால் இன்று சோவியத்தில் தோன்றியுள்ள உள்நாட்டு நெருக்கடிகளைவிட பெருமளவு நெருக்கடிகள் சீனாவிலும் தோன்றியிருக்கக் கூடும்.

மேற்குலகு தனக்கு நம்பிக்கை மோசடி செய்துவிட்டதை இன்று சோவியத் அதிபர் கொர்பசேவ் மறைமுகமாக ஏற்றுக் கொண்டுள்ளார். அமெரிக்க நிர்வாகம் சோவியத் யூனியன் தொடர்பாக கடைப்பிடிக்கும் கொள்கை பற்றி அவுஸ்திரேலிய பத்திரிகையாளரிடம் கவலை தெரிவித்த கொர்பசேவ் கடந்த காலத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் ஆதாயங்களைப் பறிகொடுத்துவிட்டால் மீண்டும் கெடுபிடிப்போர் தொடங்கிவிடும் எனவும் தெரிவித்தார்.

இந்நிலையில் சீன வெளிவிவகார அமைச்சரின் ஆலோசனை பொருத்தப்பாடு உடையதுதான். ஆனால் வெளிநாட்டவருக்காக அல்லாமல் உள்நாட்டில் தேவைக்கு ஏற்ற மாற்றம் செய்யப்படாவிட்டால் அபிவிருத்தி தொடர்ச்சியாக ஏற்படும் என்றும் சொல்லிவிட முடியாது.

# இறக்குமதியாகும் 135 மூலிகைகளில் 120 வடபகுதியில் உள்ளன

(கிளிநொச்சி)

வெளிநாடுகளிலிருந்து இலங்கை 135க்கும் அதிகமான மூலிகைகளை இறக்குமதி செய்கிறது அதில் 120 க்கும் கூடுதலான மூலிகைகள் வடபகுதியில் உள்ளது. அவற்றைச் சேகரித்து இறக்குமதியாளர்களுக்கு வழங்குவதன் மூலம் நாம் பெருமளவு பொருளாதாரத்தைச் சம்பாதிக்க முடியும்

கிளிநொச்சி விவசாய பீடத்தில் இடம் பெற்ற மூலிகை சம்பந்தபபட்ட கருத்தரங்கொன்றில் தலைமைதாங்கி உரையாற்றிய யாழ். பல்கலைகழக உயிரியல் பகுதி தலைவர் கலாநிதி எஸ். சிவகடாட்சம் மேற்கண்டவாறு கூறினார்.

இக் கருத்தரங்கில் சுதேச வைத்தியர்கள், மூலிகை சம்பந்தப்பட்டவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இக் கருத்தரங்கில் பரராசசேகரன், செகராசசேகரன் ஆகியோரால் வைத்தியம் சம்பந்தமாக எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் பலவகையான மூலிகைச் செடிகள், வதைகள், வேர்கள் ஆகியனவும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டு அவை சம்பந்தப்பட்ட விளக்கங்களும் அளிக்கப்பட்டன.

கலாநிதி சிவகடாட்சம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

எமது மூதாதையர் விட்டுச் சென்ற நூல்களை, ஏட்டுச் சுவடிகளைச் சேகரித்து, அதல கூறப்பட்டவற்றை நன்கு அறிந்து புதிய மருந்துகளை நாம் கண்டுபிடிக்க வேண்டும். அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்ய எமது பீடம் என்றும் தயாராக இருக்கிறது.

பரராசசேகரனால் எழுதப்பட்ட பரராசசேகரம் என்ற வைத்திய ஏட்டுச் சுவடி நூலுருவில் வெளியகியுள்ளது. செகராசசேகரனின் ஏட்டுச் சுவடி நூலுருப் பெறவில்லை. அது இன்றும் பனை ஓலைச் சுவடியாகவே இருக்கிறது. அதன் பெருமை எம்மவர் பலருக்குத் தெரியாது. அதன் பெருமையை உணர்ந்த இந்தியா செகராசசேகரனின் ஏட்டுச் சுவடியை அச்சேற்றி நூலாக்கி அதில் செகராசசேகரனின் பெயரை மறைத்து அகத்தியர் 2000 என்று அந்த நூலுக்குப் பெயர் சூட்டியுள்ளது, நாம் இனிமேலாவது ஏட்டுச்சுவடிகளைச் சேகரித்து நூலாக்க வேண்டும்.

- சிவகடாட்சம்

காளான் உற்பத்தி கிளிநொச்சியில் தான் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கூடிய புரதச்சத்தையுடைய இக்காளான் உற்பத்திக்குப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணத்தைக் கொண்டு போதியளவு காளான் உற்பத்தியில் நாம் ஈடுபட வேண்டும். வெளிநாடுகளில் காளான்களுக்கு பெருமளவில் மதிப்புண்டு.

மூலிகை வளர்ப்புக்குப் பணம் ஒதுக்கப்படவில்லை. அப்படியிருந்தும் ஒரு ஏக்கர் நிலத்தில் மூலிகை உற்பத்தி ஆரம்பிக்கப் பட்டுள்ளது. வெகுவிரைவில் 10 ஏக்கர் நிலத்தில் உற்பத்தி செய்யப்படும். மூலிகைகளைச் சேகரித்துஇறக்குமதியாளர்களுக்கு அனுப்புவதன் மூலமும், புதிய புதிய மருந்துகளைக் கண்டுபிடித்துச் சந்தைப் படுத்துவதன் மூலமும் எமக்கு வேண்டிய பணத்தை நாமே சம்பாதித்துக் கொள்ள முடியும்; இதுதவிர ''பட்டி''க்கு வெளிநாடுகளில் நல்ல கிராக்கி உண்டு. வேறு பல மூலிகைகளுக்கும் வெளிநாடுகளில் நல்ல கிராக்கி உண்டு. அவற்றையும் நாம் இங்கு சேகரித்து வெளிநாடுகளுக்கு அனுப்புவதன் மூலம் பெருந்தொகையான வெளிநாட்டு நாணயத்தைச் சம்பாதிக்க முடியும் என்றார். (49)

## நிரந்தரக் கிளைகளில் விநியோகம்

(வேலணை)

வேலணை ப.நோ.கூ.சங்கம் தனது எல்லைக்குட்பட்ட பகுதி மக்களுக்குதனது நிரந்தரகிளைகள் மூலமாக இலவச உலர் உணவுபபொருள்களை வழங்கி வருகின்றது. சென்ற வாரத்திற்கான உலர்உணவுப்பொருள்களை இச்சங்கம் யாழ்நகரில் வைத்து இடம் பெயர்ந்தோருக்கு வழங்கி வந்ததும் குறிப்பிடத்தக்கது. (14)

## வேட்பாளர் சுட்டுக்கொலை

(அமிர்தசரஸ்)

அமிர்தசரஸ்நகருக்குச் சமீபமாகவுள்ள பஞ்சாப் மாநிலத்தைச்சேர்ந்த கிராமம் ஒன்றில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஒருவரும் அவரதுகுடும்பத்தைச் சேர்ந்த எட்டுபபேரும், மூன்று மெய்க்காப்பாளர்களும் நேற்று முன் தினம் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளனர்.

### காஷ்மீர் குறித்து

## பாக். நிலைப்பாட்டினால் இந்தியா கவலை

(டில்லி)

காஷ்மீர் விவகாரம் குறித்து பாகிஸ்தான் அண்மையில் ஆத்திரமூட்டும் வகையில் பேசியிருப்பது குறித்து இந்தியா கவலை கொண்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சகத்தினால் கடந்த புதன் விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் பாகிஸ்தானிய பிரச்சாரத்தை முறியடிப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய பல நடவடிக்கைகள் பற்றித் திட்டமிடப் பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக பாகிஸ்தானிய பிரதம மந்திரி நவாப் ஷெரிப் ''காஷ்மீரிய மக்களுக்கு சுய நிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும். குவைத்தில் நடந்தது போன்று வெளியார்குறுக்கீடடை அழைக்கவும் அவர்களுக்கு உரிமை இருக்கவேண்டும்'' என்று தெரிவித்திருந்தார்.

இதற்கு எதிராகவே இந்தியா நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் இவ்வாறு பாகிஸ்தானிய பிரதம மந்திரி நவாப் ஷெரிப் தைரியமாகப் பேசுவதற்கு இந்தியாவின் உறுதியற்ற அரசியல்நிலைமைதான் காரணம் என்றும் அந்த அறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ளது

பேச்சு வார்த்தைகள் மூலமாக இருதரப்பு பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டுள்ள சிம்லா உடன்படிக்கைக்கு முற்றிலும் எதிரானதாக நவாப் ஷெரிப்பின் பேச்சு காணப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 301 விசேட வாணிப விதி;

## பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையை தீர்க்கலாம்

(வாஷிங்டன்)

இந்தியா, சீனா மற்றும் தாய்லாந்துடன் பேச்சுவார்த்தை நடத்தி 301 விசேட வாணிப விதிகுறித்த பிரச்சினையை தீர்க்க முடியும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது;

கடந்த புதன் வாஷிங்டனில் செனற்குழுவிற்கு தெரிவித்த அமெரிக்க வர்த்தகத் துறை அதிகாரியொருவர் இந்த நாடுகள் மீது வாணிபத்தடை விதிப்பது விரும்பத் தக்கதல்ல என்றும் தவிர்க்க முடியாததல்ல என்றும் தெரிவித்தார்;

## இரசாயன ஆயுதங்கள் அழிக்கப்படும்

(வாஷிங்டன்)

அமெரிக்காவிலுள்ள அனைத்து இரசாயன ஆயுதங்களும் அழிக்கப்படும் என்றும் இரசாயன ஆயுதங்களை எந்த ஒரு நாட்டிற்கு எதிராகவும் உபயோகப்படுத்தமாட்டோம் என்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் அறிவித்துள்ளார்

இரசாயன ஆயுதங்களை ஒழிப்பது தொடர்பாக ஜெனீவாவில நடைபெற இருக்கும் மாநாட்டிற்கு முன்னர் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் இந்த அறிவிப்பு இடம் பெற்றுள்ளது.

### வளைகுடா நெருக்கடியால்

## 70,000 இலங்கையர் வேலையை இழந்தனர்

(கொழும்பு)

வளை குடா நெருக்கடி காரணமாக எழுபதினாயிரம் இலங்கையர் வேலை வாய்ப்பினை இழந்துள்ளனர் என்றும் குவைத்தில் வேலை பார்த்தவர்களது கணிப்பீடே இதுவென்றும் தொழில் அமைச்சரால் தெரிவிக்கப்பட்டது;

இவ்வாறு வேலை வாய்ப்பினை இழந்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு மாவட்ட ரீதியாக தகவல்கள் சேகரிக்கப் படுகிறது என்றும் தொழில் அமைச்சு தெரிவித்தது.

மற்றும் வேலைவாய்ப்பினை இழந்தவர்களினது நிலைமையினை ஆராய சர்வதேச தொழில் ஸ்தாபன ஆலோசகர் இலங்கைவரவுள்ளார் என்றும் அவ் அமைச்சு தெரிவித்தது.

# விவசாயக் காப்புறுதியை விஸ்தரிக்க திட்டம்

(யாழ்ப்பாணம்)

விவசாயக் காப்புறுதித் திட்டம் யாழ். மாவட்டத்தில் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

இதுவரை காலமும் நெற்பயிருக்கு மட்டுமே விவசாயக் காப்புறுதி மேற் கொள்ளப்பட்டு வந்தது. இனிமேல் பழப் பயிர்களுக்கும் இக்காப்புறுதித் திட்டத்தை விஸ்தரிக்கும்படி நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கமநலச்சேவை சிரேஷ்ட உதவியாளர் கேட்டுக் கொண்டார்.

மேற்படி கூட்டத்தில் பயிர் காப்புறுதி உத்தியோகத்தர் கலந்து கொள்ளாமையினால் இதனை உடனடியாக அமுல்படுத்த முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் மா, பலா, வாழை, தோடை, எலுமிச்சை ஆகிய பழப்பயிர்களுக்கே மேற்படி காப்புறுதித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் எதிர்காலத்தில் மேற்படி பயிர்களின் உற்பத்தி கணிசமான அளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச)

# சிறுதானியச் செய்கையில் பூரண தெளிவில்லை

(யாழ்ப்பாணம்)

- சண்முகநாதன்

யாழ் மாவட்ட விவசாயிகளுக்கு சிறுதானிய விவசாயத்தை மேற்கொள்வது பற்றிய பூரண தெளிவு இல்லாமையே மேற்படி பயிர்ச்செய்கை வீழ்ச்சியடைவதற்குக் காரணம் என யாழ். மேலதிக அரசாங்க அதிபர் சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

சிறுதானிய விவசாய உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தியை மேற்கொள்ளும் நிலத்தின் தன்மை, நீரின்தன்மை, அவற்றுக்குப் பாவிக்கப்படும் உரம், கிருமிநாசினி ஆகியவற்றின் தன்மை பற்றி அந்தந்தப்பகுதி விவசாய உதவிப்பணிப்பாளர்கள் விளக்கவேண்டும். மேற்படி விபரங்கள் பற்றிய அறிக்கைகள் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்களினால் தமக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இவற்றை உரிய முறையில் விவசாயிகளுக்கு விளக்குவதன் மூலம் எதிர்காலத்தில் சிறந்தவிளைச்சலைப் பெறக்கூடியதாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (ச)

## தங்கக் கடத்தல்

# 11.விமானநிலையஊழியரும் நகை வியாபாரியும் கைது

(கொழும்பு)

இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு தங்கத்தை கடத்திச் செல்லும் கும்பல் ஒன்றை கொழும்பு பொலிசார் கைது செய்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு செட்டியார் தெருவிலுள்ள பிரபல நகைக் கடை வர்த்தகர் ஒருவரும், கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடமையாற்றும் பதினொரு ஊழியர்களும் இது தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்று சுங்கப் பதிப்பணிப்பாளர் தெரிவித்தார்.

ஏழு லட்சம் பெறுமதியான ஒன்பது தங்க பிஸ்கட்டுகளும் சுங்க அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

# வயோதிபத் தம்பதியினர் தற்கொலை முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அண்மைக்காலமாக அலரிவிதை உண்டு தற்கொலை முயற்சி செய்பவர்களின் தொகை அதிகரித்துள்ளது.

நேற்றுமுன் தினம் வயோதிப தம்பதிகள் குடும்பத்தில் ஏற்பட்ட சச்சரவால் அலரிவிதை உண்ட நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுதவிர அண்மைக்காலமாக ஒருநாளுக்கு இரண்டு அல்லது மூன்று அலரிவிதைச் சம்பவங்கள் யாழ். வைத்தியசாலைக்கு வந்தவண்ணம் உள்ளன. (லோ)

---

மொறட்டுவை

கலாம் எனவும், அரசின் கொலைப்படையே இதனைச் செய்திருக்கலாம் எனவும் தெரியவருவதாக ஏஜென்சிச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

---

பூரியன்காட்டு

யில் கல்விகற்பிக்கும் செல்வி நேசமலர் தம்பிராஜா (வயது 24, வாகரை) என்பவரைச்சிறிலங்கா இராணுவத்தினர் கைது செய்தனர்.

பின் இராணுவத்தினர் இவரை பாலியல்வன்முறைக்குள்ளாக்கிவிட்டு கடந்த வியாழக்கிழமையன்று வெட்டிக் கொலை செய்துள்ளனர்.

---

உள்ளூராட்சி

இந்தமாதம் 20ஆம்திகதிமுதல் ஜூன் மாதம் 20 ஆம் திகதி வரை பல்வேறு மாவட்டங்களிலும் பரவலாக நடத்தப்படும் என பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

---

நிவாரணம்

வழங்குதலும் புனர்வாழ்வு அமைச்சின் வரையறுத்த கொள்கையாகும். மக்கள் தமது சொந்த இடங்களிற்கு மீண்டும் குடியமரும்வரை இந்த நிவாரணம் வழங்குதல் வேண்டும்.

அத்துடன் உலர் உணவு வாரந்தோறும் வழங்கப்பட்டிருக்க வேண்டும் ஆனாலும் 44 வாரங்களில் 4 வாரம் மட்டுமே இந்த நிவாரணம் வழங்கப்பட்டது. இவ்வாறு அரசினால் புறக்கணிக்கப்பட்டபின் அகதிகளாக எவ்வளவு நாட்கள் உயிர்வாழ்வது எனவும் அம்மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிறிலங்கா நடவடிக்கைகளால் வெளியேறியதாம் தண்ணீரூற்று, முள்ளியவளை, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள அகதி முகாம்களிற்குச் சென்றதாகவும் அங்கு முகாம்கள் வெளிமாவட்டத்தில் இருந்து வந்த மக்களால் நிரம்பியிருந்த காரணத்தால் முகாம் வசதியற்ற நிலையில் தனியார்

# பாகிஸ்தானுக்கு சீனதயாரிப்பு பலஸ்டிக் ஏவுகணைகள்

(வாஷிங்டன்)

பாகிஸ்தானுக்குப் பலஸ்டிக் ஏவுகணைகளை விற்றிருப்பதாகவும், ஆனால் இன்னமும் அவை அனுப்பப்படவில்லை என்றும் சீனா தெரிவித்துள்ளது என அமெரிக்கா அறவித்துள்ளது.

அமெரிக்கத் துணை வெளியுறவு அமைச்சர் ராபட் சிமித் சென்றவாரம் சீனா சென்றபோது இந்த விற்பனை குறித்து சீனா அவருககுத் தெரிவித்ததாக வாஷிங்டனில் செய்தியாளர்கள் மத்தியில் பேசும்போது தெரிவித்தார்.

அத்துடன் விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்ட ஏவுகணைகளுக்கான வரம்பைவிட இது குறைவுதான் என்று சீனா தெரிவித்ததாகவும் ராபட் சிமித் தெரிவித்தார்.

ஆனால் இந்த ஏவுகணைகளில் எடுத்துச் செல்லப்படும் ஆயுதங்கள் நிர்ணயிக்கப்பட்ட வரம்பைவிட அதிகமாக இருக்கும் என்று அமெரிக்க உளவு விசாரணைத் துறை அதிகாரிகள் தெரிவித்திருப்பதாக 'வாஷிங்டன் போஸ்ற்' தெரிவித்தது.

வட இந்தியாவின் இலக்குகளைத் தாக்கக்கூடிய அளவிற்கு இந்தஏவுகணை அமைந்திருக்கிறதென்றும்வாஷிங்டன் போஸ்ற் தெரிவித்துள்ளது.

# கருத்துக் கணிப்பில் இ. காங்கிரஸ் முன்னணியில்

இந்தியாவில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் இந்திராகாங்கிரஸ் கட்சி அதிகமான இடங்களைக் கைப்பற்றும் அல்லது ஆட்சியைப்பிடிக்கும் என பல முக்கிய பத்திரிகைகள் கருத்துக் கணிப்பு வெளியிட்டுள்ளன. சண்டே இதழின் கருத்துப்படி இந்திரா காங்கிரஸ் கட்சி 310 இடங்களையும், பாரதீய ஜனதா 85 இடங்களையும், ஜனதா தளம 30 இடங்களையும் கைப்பற்றுமெனக் கூறப்படுகிறது. 1980 இல் இந்திரா காந்தி நிலையான ஆட்சி தருவேன் என உறுதிகூறி அமோக வெற்றி பெற்றதுபோல இம்முறைராஜீவ்காந்தி வெல்வார் என அது கூறியுள்ளது

இந்தியா ருடே பத்திரிகை இந்திராகாங்கிரஸ் 233 இடங்களையும், பாரதீய ஜனதா சிவசேனைக் கூட்டணி 155 இடங்களையும், தேசிய முன்னணி இடதுசாரிக் கூட்டணி 105 இடங்களையும்கைப்பற்றுமென கணித்திருக்கிறது.

புரண்ட் லைன் இதழின் கணிப்பின்படி இந்திரா காங்கிரஸ் 224 இடங்களையும், பாரதீய ஜனதா சிவசேனைக் கூட்டணி 140 இடங்களையும் தேசிய முன்னணி இடதுசாரிக் கூட்டணி 115 இடங்களையும் கைப்பற்றுமென எதிர்பார்ப்புத் தெரிவிததுள்ளது.

இந்தியா ருடே, புரண்ட் லைன் பத்திரிகைகள் இந்திரா காங்கிரஸ்கட்சி அதிக ஆசனங்களைக் கைப்பற்றினாலும், ஆட்சி அமைக்கும் பலத்தைப் பெறாது எனத் தெரிவித்துள்ளன.

# எல்லைப் பிரச்சினை தீர்க்க சீன-சோவியத் ஒப்பந்தம்

(மொஸ்கோ)

சீனாவும் சோவியத்யூனியனும் தமது நாடுகளிடையே ஏற்பட்டுள்ள எல்லைப்பிரச்சினையைத் தீர்க்கும் வகையிலான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் சோவியத் வெளியுறவு அமைச்சர் அலெக்சாண்டர்பெஸ்மத் நிக்கும், சீன வெளியுறவுஅமைச்சர் கியான் குயின் சின்னும்மொஸ்கோவில் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டனர்.

இதனைத் தொடர்ந்து கிரெம்ளினில் இவர்கள் பேச்சுவார்த்தை நடத்துகின்றனர். இவ் ஒப்பந்தம் குறித்து கருத்து வெளியிட்ட சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் "பெரியதொரு சம்பவம், சீன-சோவியத் வரலாற்றில் குறிப்பிடக்கூடிய நாள்'' எனக் குறிப்பிட்டார்.

சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் குறிப்பிடுகையில் 'சீன-சோவியத் உறவுகள் வளர்ச்சி அடைவது இருநாடுகளுக்குமே நல்லது'' எனக் குறிப்பிட்டார்.

---

வடபகுதி

கொழும்பு, அனுராதபுரம், பொலநறுவை, சிலாபம், புத்தளம், மட்டக்களப்பு, திருக்கோணமலை, அம்பாறை, வவுனியா, மன்னார் பரீட்சை நிலையங்களுக்கு இரண்டாம் கட்ட வினாத்தாள்கள் எவ்வித சிரமமுமின்றி அனுப்பி வைக்கப்பட்டன.

வவுனியாவில் ஊரடங்கு அமுலில் இருந்ததால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு வினாத் தாள்களை எடுத்துச் செல்வதை அனுமதிக்கக் கூட்டுப் படைகளின் தலைமையலுவலகம் மறுப்புத்தெரிவித்தது. இந்நிலையில் சதிகாரர்கள் தீவிரமாகச் செயற்படத் தொடங்கினர். சதிகாரரின் ஆலோசனைப்படி மேற்படி மூன்று மாவட்டங்களிலும பரீட்சை நடாத்துவதில்லை என்று முடிவெடுக்கப்பட்டது.

வவுனியாவில் இராணுவநடவடிக்கை திடீரென நிறுத்தப்பட்டு ஊரடங்குச்சட்டம் நீக்கப்பட்டதும் பரீட்சை வினாத் தாள்கள் எடுத்து வரக்கூடிய சூழ்நிலை உருவாகியது.

இதைத்தொடர்ந்தாற் போல் பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளின் சதித்திட்டம் தோல்வியில் முடிந்தது

---

விடைத்தாள்

களை அனுப்பி உதவுமாறு பரீட்சைப்பகுதி ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல கோரியுள்ளதாக யாழ். கல்வித் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

---

இல்லங்களில் தாம் தஞ்சமடைய நேரிட்டது எனவும், தமது நிலையை பலமுறை அரச அதிகாரிகளுக்குத் தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாத காரணத்தாலேயே தாம் சாத்விகப் போராட்டத்தில் குதிக்க வேண்டியுள்ளது எனவும் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

சர்வதேச

கடந்த காலத்தில் சிறிலங்கா அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை கண்டன அறிக்கை மற்றும் விளம்பரங்கள் வெளியிட்டு வந்தது தெரிந்ததே.

சிறிலங்காவில் இடம்பெறும் மனித உரிமை மீறல் சம்பந்தமான வழக்குகளை நடத்துவதற்காக வழக்கறிஞர் சங்கத்திற்கு இச்சபை நிதிஉதவியும் அளித்துவந்தது. அதனால் காலஞ்சென்ற அமைச்சர் ரஞ்சன் விஜேயரத்தினா இச்சபையைப்பயங்கரவாதிகள் அமைப்பென வர்ணித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1975ஆம் ஆண்டில் சிறிமாவோ அம்மையார் ஆட்சிக் காலத்தில் வெளியேற்றப்பட்ட ''அம்னஸ்டி இன்டர்நாஷனல்'' அமைப்பு பின்னர் 1983 லும் 1989லும் இலங்கைக்கு வர முயற்சித்தபோதும் சிறிலங்கா அரசு மறுப்புத் தெரிவித்திருந்தது

அமைச்சர் ரஞ்சன் கொலையுண்ட இருமாதங்களின் பின் கொழும்பில் தொழிற்சங்க மாநாடொன்றில் பங்குபற்ற வந்த மன்னிப்புச்சபை உறுப்பினர் இருவர், இராணுவத் தளபதி, பாதுகாப்புச் செயலாளர், பொலிஸ் மா அதிபர், சிறைச்சாலை ஆணையாளர், புனர்வாழ்வுத்துறை அதிகாரிகள் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து இப்போது இச்சபையின் உறுப்பினர் மூவர் நாட்டுக்குள் வர அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இலங்கையில் மனித உரிமை பேணுவதற்கு உத்தரவாதமளிக்கப்பட வேண்டும் என்று ஐரோப்பிய சமூக அமைப்பும், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளும் வற்புறுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# ஆதாரம் காட்டிப் பெறவும்

(யாழ்ப்பாணம்)

சங்குப்பிட்டி இறங்குதுறையில் ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியான காசோலை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதனை உரியவர் ஆதாரம் காட்டி பூநகரி நிதிப்பிரிவு அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். (70)

---

உணவு

அதிபர்களுடன் கலந்தாலோசனை செய்து இக்கொடுப்பனவு சம்பந்தமான முடிவுகளை எடுக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இறுதியாக கூட்டுறவுச் சங்கங்களில் பொருள்கள் பற்றாக்குறை ஏற்படுமிடத்து யாழ். செயலக உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியுடன் தொடர்பு கொள்ளும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவு சங்கம் இன்று முதல் இடம் பெயர்ந்தவர்களுக்கான 8 ஆம்9 ஆம் கட்ட உலர் உணவு நிவாரணத்தைகொடுக்கஆரம்பிக்க உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (43) (22)

---

ஜோசிம்

இதற்குப் பாதுகாப்பிற்காகப் பல நவீனரக ஆயுதந் தாங்கிய சொந்த மெய்ப்பாதுகாவலர்களையும் நியமித்திருந்தார். பல சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததாக இவர்மீது குற்றம் சுமத்தப்பட்டு கடந்த பங்குனி மாதம் இவர் இலங்கையிலிருந்து நாடு கடத்தப்பட்டார் என்பது வாசகர்கள் அறிந்ததே. (ச)

---

வடக்கு-கிழக்கு

அவுஸ்திரேலியா ஏற்கனவே இந்தத் திட்டத்தின்கீழ் மட்டக்களப்பு வாவியில் இறால் பிடிப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய 2500 மீன்பிடி வலைகளையும் வழங்கியுள்ளது. இதன் பெறுமதி 3லட்சத்து 60 ஆயிரம் அவுஸ்திரேலியடாலர்களாகும்

இந்தத் திட்டத்தின் கீழ் அவுஸ்திரேலியா சுமார் 30லட்சத்துக்கும் அதிகமான அவுஸ்திரேலிய டாலர்களை வழங்க இருக்கிறது.

---

துப்பாக்கி

இடைவிடாத துப்பாக்கிப்பிரயோகமும், தொடர்ச்சியான ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டன.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.